இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

திருப்பாடல்களையும், வறுமையால் துன்புறும் மக்களின் வாழ்வனுபவங்களையும் மேற்கோள் காட்டி, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், ஏழைகளை கருணை காட்டும் பொருளாக அல்ல, மாறாக நம்பிக்கையின் நாயகர்களாக (protagonists of hope) அங்கீகரிக்குமாறு கிறிஸ்தவர்களை வலியுறுத்துகிறார்.

# 'நீரே என் நம்பிக்கை': 9வது உலக ஏழையர் தினத்திற்கான திருத்தந்தை 14ம் லியோவின் செய்தி

திருஅவையானது 2025 ஆம் ஆண்டு, நவம்பர் 16 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, ஒன்பதாவது உலக ஏழையர் தினத்தைக் கொண்டாடத் தயாராகி வரும் வேளையில், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் "நீரே என் நம்பிக்கை" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். மேலும், இந்த யூபிலி ஆண்டானது, பழைய மற்றும் புதிய வடிவங்களிலான வறுமையை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என்று நம்புவதாகவும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

திருப்பாடல்களையும், வறுமையால் துன்புறும் மக்களின் வாழ்வனுபவங்களையும் மேற்கோள் காட்டி, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், ஏழைகளை கருணை காட்டும் பொருளாக அல்ல, மாறாக நம்பிக்கையின் நாயகர்களாக (protagonists of hope) அங்கீகரிக்குமாறு கிறிஸ்தவர்களை வலியுறுத்துகிறார். இந்த யூபிலி ஆண்டு, "மிகவும் வறிய நிலையில் உள்ளவர்களுக்கு ஆதரவளிக்கவும் உதவவும் புதிய முயற்சிகளை" செயல்படுத்த ஒரு சந்தர்ப்பமாக அமையலாம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். மேலும், "உழைப்பு, கல்வி, வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் ஆகியவையே பாதுகாப்பின் அடித்தளங்கள்; இந்தப் பாதுகாப்பை ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஒருபோதும் அடைய முடியாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏழைகளின் பாதுகாவலரான புனித பதுவை அந்தோணியாரின் திருவிழா அன்று வெளியிடப்பட்ட திருத்தந்தையின் இந்த செய்தி, நமது உலகில் பரவியிருக்கும் உறுதியற்ற தன்மைக்கு ஒரு பதிலாக, கிறிஸ்தவ நம்பிக்கையை மீண்டும் கண்டறிய விசுவாசிகளுக்கு அழைப்பு விடுக்கிறது.

"கடவுள் மீதான நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றம் தராது," என்று உறுதியளித்த திருத்தந்தை, "வாழும் கடவுள்மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்ற புனித பவுலின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்.

### சிரமங்களுக்கு மத்தியில் நம்பிக்கையின் சாட்சிகள்

ஏழைகள், பொருள்சார்ந்த பாதுகாப்பற்ற நிலையில் இருநதாலும், அவர்கள் பெரும்பாலும் ஆழமான மற்றும் நீடித்த நம்பிக்கையைக் கொண்டுள்ளனர் என்பதை திருத்தந்தை குறிப்பிடுகிறார். "அவர்களால் அதிகாரத்தின் மற்றும் உடைமைகளின் பாதுகாப்பைச் சார்ந்திருக்க முடியாது. அவர்களின் நம்பிக்கை அவசியமாக வேறொரு இடத்தில் தேடப்பட வேண்டும்," என்று அவர் எழுதுகிறார். துல்லியமாக இந்த பாதிக்கப்படக்கூடிய நிலையில்தான், "நாமும் நிலையற்ற நம்பிக்கைகளிலிருந்து நீடித்த நம்பிக்கைக்குக் கடந்து செல்கிறோம்" என்று திருத்தந்தை விளக்குகிறார்.

"கடவுளை அறியாமல் இருப்பதே வறுமையின் மிக மோசமான வடிவம்," என்று அவர் தொடர்கிறார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'நற்செய்தியின் மகிழ்ச்சி' (Evangelii Gaudium) என்ற ஏட்டிலிருந்து மேற்கோள் காட்டி, "விசுவாசத்திற்குச் சிறப்பானதொரு திறந்த மனதைக் கொண்டுள்ள" ஏழைகளுக்கு ஆன்மீகக் கவனிப்பு மறுக்கப்படக் கூடாது என்பதை அவர் எடுத்துரைக்கிறார்.

### பொறுப்புணர்வின் யூபிலி

திருத்தந்தை லியோ அவர்கள், புனித அகஸ்தினாரின் ஞானத்தையும் எதிரொலிக்கிறார்; வெறும் தாராள மனப்பான்மையை விட நீதிக்கு அவர் முன்னுரிமை அளிக்கிறார்: "நீங்கள் பசியுள்ள ஒருவருக்கு ரொட்டி கொடுக்கிறீர்கள்; ஆனால் யாரும் பசியுடன் இருக்கவில்லை என்றால் அது இன்னும் சிறப்பாக இருக்கும்," என்று அவர் மேற்கோள் காட்டுகிறார்.

தனது செய்தியை நிறைவுசெய்யும் விதமாக, திருத்தந்தை அனைவரையும் துயருறுவோரின் ஆறுதலான அன்னை மரியாவிடம் ஒப்படைக்கிறார். மேலும், 'தே தேயும்' (Te Deum - இறைவா உம்மைப் போற்றுகிறோம்) பாடலின் வார்த்தைகளுடன் "நம்பிக்கையின் பாடலை" உயர்த்துமாறு திருஅவைக்கும் உலகிற்கும் அவர் அழைப்பு விடுக்கிறார்: "ஆண்டவரே, உம்மில் எங்கள் நம்பிக்கை உள்ளது, நாங்கள் ஒருபோதும் வீணாக விடமாட்டீர்."

லிண்டா போர்டோனி

# உலகை மாற்றும் கருவி 'கல்வி'

நமது திருத்தந்தை லியோ அவர்கள் சமீபத்தில் கல்வித்துறையைச் சேர்ந்தவர்களையும், நம் எதிர்காலமாகிய மாணவர்களையும் ஒரு வாரம் முழுவதும் சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கல்வி குறித்துப் பேசிய சில அருமையான கருத்துக்கள். திருத்தந்தை அவர்கள், "இந்த உலகை மாற்றுவதற்கு நம்மிடம் இருக்கும் மிக அழகான மற்றும் சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்று 'கல்வி'" என்று அழுத்தமாகச் சொன்னார். மேலும், "கல்வியின் மூலம் நாம் ஒரு சிறந்த சமுதாயத்தைப் படைக்கப் பாடுபட வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார். இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்க, திருத்தந்தை அவர்கள் இத்தாலியைச் சேர்ந்த அருளாளர் (புனிதர்) பியர் ஜியோர்ஜியோ ஃப்ராசாட்டி அவர்களின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தார். ஃப்ராசாட்டி சொன்னது போல:

- "நம்பிக்கை இல்லாமல் வாழ்வது, வாழ்வதே அல்ல; அது வெறுமனே அர்த்தமற்ற இருத்தலாகும்."
- எனவே, "உங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழத் தைரியம் கொள்ளுங்கள்" என்று திருத்தந்தை மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதாவது, சும்மா வெளித்தோற்றத்திற்காகவும் (fashion), அல்லது உடனே கிடைக்கும் சின்னச் சின்ன இன்பங்களுக்காகவும் வாழாமல், நமது எண்ணங்களும் செயல்களும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க விரும்பும் இளைஞர்கள், உயர்ந்த இலட்சியங்களை நோக்கிச் செல்ல வேண்டும் என்றும், மற்றவர்களுக்கு 'நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக' திகழ வேண்டும் என்றும் அவர் கூறினார். திருத்தந்தை மாணவர்களிடம் பேசும்போது, "நீங்கள் கல்வியைப் பெற்றுக் கொள்பவர்கள் மட்டுமல்ல, நீங்கள்தான் அந்தக் கல்வியின் உண்மையான கதாநாயகர்கள் (protagonists)" என்று கூறினார்.

"நீங்கள் அனைவரும் உண்மைக்கும் அமைதிக்கும் சாட்சிகளாக மாற வேண்டும். நீங்கள் உண்மையைத் தேடும்போதும், அமைதியைக் கட்டியெழுப்பும்போதும், உங்கள் நண்பர்களையும் உங்களோடு சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று அவர் ஊக்கப்படுத்தினார். இறுதியாக, புனித ஜான் ஹென்றி நியூமன் அவர்களின் ஒரு அழகான கூற்றையும் திருத்தந்தை நினைவுபடுத்தினார்: "அறிவு என்பது, நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போதுதான் வளர்கிறது. பல மனங்கள் ஒன்று சேர்ந்து உரையாடும்போதுதான் (dialogue), உண்மையின் சுடர் பிரகாசமாக எரிகிறது." எனவே, நாம் கற்ற கல்வியை நம்மோடு வைத்துக்கொள்ளாமல், பிறரோடு பேசி, பகிர்ந்து, அதன் மூலம் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பதே திருத்தந்தையின் ஆழமான செய்தியாகும்.

# கல்லறைகள் நிலைவாழ்விற்கான எதிர்நோக்கின் அடையாளங்கள்!



கடந்த நவம்பர் 3, திங்கட்கிழமை, நமது திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், இறைவனடிச் சேர்ந்த நமது முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காகவும், மற்ற கர்தினால்கள் மற்றும் ஆயர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் புனித பேதுரு பெருங்கோவிலில் ஒரு சிறப்புத் திருப்பலி நிறைவேற்றினார். அந்த மறையுரையில், மரணத்தைக் குறித்த நமது ஆழமான கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றி அவர் பேசியது, நம் ஒவ்வொருவரின் மனதிலும் பதிய வேண்டிய ஒன்றாகும்.

திருத்தந்தை அவர்கள், "நமது கிறிஸ்தவ நம்பிக்கை என்பது சாதாரண மனித நம்பிக்கைகளைப் போன்றது அல்ல; அது கிரேக்கர்களோ அல்லது யூதர்களோ கொண்டிருந்த நம்பிக்கையைப் போன்றதும் அல்ல. மாறாக, இது ஒரு 'புதிய நம்பிக்கை'" என்று கூறினார்.

எப்படி நமது ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவரது வாழ்க்கை, முன்பு இருந்தது போல் இல்லாமல், இறைத்தந்தையின் ஆவியின் வல்லமையால் உருவாக்கப்பட்ட முற்றிலும் புதியதாக இருந்ததோ, அப்படியே நமது நம்பிக்கையும் ஆண்டவரின் உயிர்த்தெழுதலில் வேரூன்றியுள்ளது. இந்த நம்பிக்கை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முதன்முதலில் திருத்தந்தையாகப் பெற்ற யூபிலி ஆண்டில், ஒரு சிறப்பான அர்த்தத்தைப் பெறுகிறது என்றும் திருத்தந்தை லியோ சுட்டிக்காட்டினார்.

இந்த நம்பிக்கையை விளக்க, திருத்தந்தை எம்மாவுஸ் சீடர்களின் நிகழ்வை (லூக் 24:13–35) அழகாக எடுத்துரைத்தார். அந்தச் சீடர்கள், துயரத்தோடும் குழப்பத்தோடும் தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். ஆனால், வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவைச் சந்தித்தபோது, அவர்கள் நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டது.

குறிப்பாக, இயேசு "அப்பம் பிட்டு" கொடுத்தபோது, அவரது உயிருள்ள பிரசன்னத்தை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அந்த நொடியில், அவர்களின் விரக்தி ஒரு புதிய நம்பிக்கையாக மாறியது. இது ஏதோ மனித ஞானத்தில் வந்த நம்பிக்கை அல்ல, மாறாக "சிலுவையில் அறையப்பட்டவர் உயிர்த்தெழுந்தார்" என்ற உண்மை மீது வேரூன்றிய உயிர்ப்பின் நம்பிக்கை என்று திருத்தந்தை விளக்கினார்.

"கிறிஸ்துவின் வெற்றியின் மூலம், மரணமே உருமாற்றம் பெற்றுவிட்டது. ஒரு காலத்தில் நமது எதிரியாகக் கருதப்பட்ட மரணம், இப்போது விசுவாசிகளை (நம்மை) நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்லும் ஒரு 'சகோதரியாக' மாறியுள்ளது."

"ஆகையால், கிறிஸ்தவர்களாகிய நாமும் அன்புக்குரியவர்களின் இழப்பிற்காகத் துயரப்படுகிறோம், ஆனால் 'நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போல' நாம் துயரப்படுவதில்லை. ஏனென்றால், மரணத்தால் நம்மைக் கிறிஸ்துவிடமிருந்து பிரிக்க முடியாது" என்று அவர் உறுதியாகக் கூறினார்.

"கிறிஸ்தவர்கள் நல்லடக்கம் செய்யப்படும் இடங்களை நாம் 'கல்லறைகள்' என்று அழைப்பதை விட, அதன் மூல வார்த்தையான 'Cemeteries' (அதாவது 'உறங்கும் இடங்கள்' - Sleeping Places) என்று அழைக்கிறோம்."

ஏன் அப்படி அழைக்கிறோம்? ஏனெனில், அந்த இடங்கள், உயிர்த்தெழுதலின் மீதான நமது அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படையாக வெளிப்படுத்துகின்றன. அங்கே இருப்பவர்கள் இறந்துவிடவில்லை, மாறாக, ஆண்டவரின் வருகைக்காகவும், இறுதி உயிர்த்தெழுதலுக்காகவும் "உறங்கிக்" காத்திருக்கிறார்கள் என்பதே இதன் பொருள்.

இறுதியாக, திருத்தந்தை அவர்கள், தானியேல் நூலில் (தானி 12:3) உள்ள இறைவார்த்தைகளை நினைவுகூர்ந்து, இறைவனடிச் சேர்ந்த முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், மற்ற ஆயர்களும் "வானத்தில் விண்மீன்களைப் போல" ஒளிர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக்கொண்டார்.

# புனித லூர்து மாதா பங்கின் மேய்ப்புப்பணி மாநாடு

புனித லூர்து மாதா பங்கின் மேய்ப்புப்பணி மாநாடு

கடந்த 26.10.25 மதியம் 12 மணி முதல் மாலை 5.30 வரை ஈப்போ, புனித லூர்து மாதா தேவாலயத்தின் 2025ஆம் ஆண்டுக்கான பங்கு மேய்ப்புப்பணி மாநாடு மிகவும் அர்த்தமுள்ளதாகவும், சிறப்பாகவும் நடந்தேறியது. இதில் பங்கின் பணிக்குழு, அ.தி.ச. தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி ரோபர்ட் டேனியல் அவர்களின் ஆரம்ப ஜெபம் மற்றும் தொடக்கவுரையோடு ஆரம்பிக்கப்பட்டது.

இதில் குடும்பம் என்ற தலைப்பில் திரு. ரமேஸ் விக்டர் அவர்கள் விளக்கவுரையும், குழுப் பகிர்வையும் ஏற்று நடத்தினார். அவர் தமது உரையில், குடும்பமே முதல் திருச்சபையாகும். அதில் உள்ள ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் செவிக்கொடுத்து, இணைந்து நடந்து செயல்பட வேண்டும். திருமண பந்தத்தின் மூலம் குடும்பம் உருப்பெறுகிறது. திருமணம் என்பது ஒரு திருவருட்சாதனம். எனவே, திருமணம் இறைவனால் அருளப்பட்ட ஒன்று. இது ஒப்பந்தம் அல்ல. குழந்தைகளும் இத்திருவருட்சாதனத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், இக்குடும்பங்களைச் சிதைக்கப் பல புல்லுருவிகள் தலைதூக்கியுள்ளன.

அவை யாவை என அறியப் பங்கேற்பாளர்கள் குழுவாரியாகப் பிரிக்கப்பட்டு கலந்துரையாடினர். அதிலிருந்து பல கருத்துகள் வெளிப்பட்டன. அவை பணப்பிரச்சனை, கோபம், தற்பெருமை, குடும்பத்தில் மூன்றாம் நபர் தலையிடுதல், கைப்பேசி, தொலைக்காட்சியில் சின்னத்திரை, புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுக்காத மனப்பான்மை என விளக்கங்களோடு பட்டியலிடப்பட்டது. எனவே, அனைத்துத் தீயதும் குடும்பத்திலிருந்தே ஆரம்பமாகிறது என உணரப்பட்டது.

"என் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பு செய்வதற்கும், ஒற்றுமையாக இருப்பதற்கும் மற்றும் மதிப்புக் கொடுப்பதற்கும் பெரிய தடையாக எதுவாக இருக்கின்றது?" என மன ஆய்வு செய்யக் கூறினார் திரு. ரமேஸ் அவர்கள். மேலும், இணையத் திசைதிருப்பலான சமூக வலைதளம், இணையம், விளையாட்டுகள், வீடியோக்கள் போன்ற டிஜிட்டல் சாதனங்கள் மூலம் நமது கவனத்தை முக்கியப் பணிகளிலிருந்து விலக்கி திசைமாறச் செய்கிறது என்றார். இந்த இணையதளங்களிலிருந்து வருபவற்றில் 70% பொய்யான தகவல்கள் என ஆய்வாளர்கள் கூறியதை விவரித்தார்.

எனவே, இவ்வாறான பிரச்சனைகளைக் களையக் குடும்ப உறுப்பினர்களிடையே சீரான தொடர்பு இருக்க வேண்டும், ஒருவருக்கொருவர் செவிசாய்க்க வேண்டும், குறிப்பாக ஆதரவு வழங்க வேண்டும் என்றார். இதனைச் செயல் வடிவம் பெற மூன்று அரிய காரியங்கள் மேற்கோள் காட்டப்பட்டன. அதாவது பங்கு மக்கள் அனைவரும் தத்தம் குடும்பங்களில் இதனைச் செயல்படுத்த ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

1. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குடும்ப ஜெபம் செய்ய வேண்டும்.
2. ஒவ்வொரு சனிக்கிழமையும் குடும்பப் பொழுதுபோக்கு. அதாவது குடும்பத்தோடு கலந்துரையாடல் அல்லது குடும்பமாக வெளியே செல்லுதல் அல்லது தோட்ட வேலை (பயிரிடுதல்). இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்வதாகும்.
3. ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தோடு உணவருந்துதல் என்பதாகும்.

மாறிவரும் உலகில் குடும்பமே ஒரு குட்டித் திருஅவையாகத் திகழ்ந்து அரிய பல காரியங்களைச் செய்ய இயலும் என இந்நிகழ்வின் வழி சிந்தித்து, தெளிவடைந்தோம். குழு நிகழ்விலும் அனைவரும் உற்சாகமாகப் பங்கேற்றனர். திரு. ரமேஸ் அவர்களின் இந்த விளக்கமும், குழுப் பகிர்வும் அனைவருக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

அன்புடன் குளோரியா மெத்யூஸ்.



# குடும்ப ஆன்மீகத்தை மீண்டும் கண்டறிதல்!

கோலாலம்பூர்: செதாபாக், நல்லாயன் ஆலயத்தைச் சேர்ந்த 65க்கும் மேற்பட்ட பங்கு மக்கள், 'குடும்ப ஆன்மீகம்' என்ற தலைப்பில் நடைபெற்ற ஒரு நாள் தியானத்தில் (recollection) கலந்துகொண்டனர். "இன்றைய சவாலான உலகில், ஒரு குடும்பம் எப்படி வலிமையோடும் சக்தியோடும் இருப்பது என்பதைப் பற்றி, இந்த நிகழ்வு எங்களுக்கு மிகவும் ஊக்கமளிப்பதாகவும், ஆழமானதாகவும், வித்தியாசமானதாகவும் இருந்தது" என்று கலந்துகொண்ட பலர் கருத்துத் தெரிவித்தனர்.

பங்குத் தந்தை மிட்செல் ஜோசப் அவர்கள் நிகழ்விற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இன்றைய காலத்தின் மாற்றங்களையும் சவால்களையும் நாம் சந்திக்கும்போது, "வலிமையான, நிலையான, ஆன்மீகத்தில் வேரூன்றிய மற்றும் ஒருவருக்கொருவர் ஆதரவான" குடும்பங்களைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை அவர் தனது வரவேற்புரையில் வலியுறுத்தினார்.

இந்தத் தியான நிகழ்வின் சிறப்புப் பேச்சாளரான திரு. மார்ட்டின் ஜல்லே, இந்த அருமையான நிகழ்வை ஏற்பாடு செய்த பங்கின் குடும்ப வாழ்வு பணிக்குழுவை (Family Life Ministry - FLM) மனதாரப் பாராட்டினார். சரியான நேரத்தில், மிகவும் பொருத்தமான ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்ததற்காகவும் அவர் பாராட்டினார்.

அவர் மேலும் பேசுகையில், "என்னைப் பொறுத்தவரை, இன்று ஒரு பங்கில் மிக முக்கியமான பணிக்குழு என்றால் அது குடும்ப வாழ்வு பணிக்குழுதான். ஏனென்றால், 'வீட்டுத் திருஅவை' (domestic church) என்று அழைக்கப்படும் நமது குடும்பத்தின் நல்வாழ்வு சரியாக இருந்தால், பங்கு நலமாக இருக்கும். பங்கு என்பது 'குடும்பங்களின் குடும்பம்'. குடும்பங்கள் வலிமையாக இருக்கும்போது, அவை முழுப் பங்கின் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிக்கின்றன," என்றார்.

"குடும்பம் - கடவுளின் மாபெரும் கொடைகளில் ஒன்று" என்ற தலைப்பிலான முதல் அமர்வில், திரு. மார்ட்டின் பேசினார். நமது குடும்பத்தை எப்போதும் கடவுளிடமிருந்து கிடைத்த ஒரு விலைமதிப்பற்ற பரிசாகப் பார்க்க வேண்டும் என்றும், அதை ஒருபோதும் சாதாரணமாக எண்ணிவிடக் கூடாது என்றும் அவர் நினைவூட்டினார். மறைந்த பேராயர் டெஸ்மண்ட் டுடுவின் வார்த்தைகளை அவர் மேற்கோள் காட்டினார்: "உங்கள் குடும்பத்தை நீங்கள் தேர்ந்தெடுப்பதில்லை. அவர்கள் உங்களுக்குக் கடவுளின் பரிசு, நீங்கள் அவர்களுக்குக் கடவுளின் பரிசு."

திரு. மார்ட்டின் இதைப் பற்றி மேலும் வலியுறுத்துகையில், "இயேசு, ஒரு மனித குடும்பத்தின் வழியாக உலகில் நுழையத் தேர்ந்தெடுத்ததன் மூலம், குடும்பம் என்ற அமைப்புக்கு ஒரு புதிய ஆன்மீக மாண்பைக் கொடுத்தார். இறைமகனே பிறந்து வாழ்வதற்குப் போதுமான அளவு பரிசுத்தமான இடம்தான் குடும்பம்," என்றார்.

இறுதி அமர்வில், கிறிஸ்தவ குடும்ப ஆன்மீகத்தின் முக்கியப் பண்புகளை மார்ட்டின் பகிர்ந்து கொண்டார். ஒவ்வொரு கத்தோலிக்கக் குடும்பத்திற்கும் "உள்ளார்ந்த ஆன்மீகம்" (spirituality of interiority) தேவை. அதாவது, கடவுள் குடும்ப வாழ்வின் மையத்தில் தனிப்பட்ட ஒரு நபராக இருக்க வேண்டும், மேலும் அவருக்கு முதன்மையான முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

இந்தத் தியான நிகழ்வு ஒரு பெரிய நம்பிக்கையோடு முடிவடைந்தது. நிகழ்விலிருந்து சென்ற குடும்பங்கள், தங்கள் விசுவாசத்தில் பலப்படுத்தப்பட்டவர்களாகவும், அன்பில் புதுப்பிக்கப்பட்டவர்களாகவும், கடவுளைத் தங்கள் இல்லத்தின் இதயமாக்க உத்வேகம் பெற்றவர்களாகவும் சென்றனர். – கிறிஸ்டின் கிரிஸ்டபர் ச்யோங்.





# கிறிஸ்துவின் பேரின்ப அரசை உடைமையாக்குவோம்

திருஅவை இன்று, திருவழிபாட்டின் மூன்றாம் ஆண்டு நாள்காட்டியை (காலாண்டர்) நிறைவு செய்யும் வகையில் கிறிஸ்து அரசர் திருவிழாவைக் கொண்டாடுகிறது. “அரசர்” என்றால் அதிகாரமும் ஆற்றலும் பொருந்தியவராக இருப்பார் என்பதால் கிறிஸ்து இயேசுவை அரசர் என அழைப்பது பொருத்தமாக இருக்குமா என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழலாம். உண்மைதான், கிறிஸ்து இயேசு அரசர் என்றால் அதிகாரம் கொண்டிருப்பார் அல்லவா? ஏழையாக மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருப்பாரா? பிழைப்புக்காகத் தச்சனாகத் தொழில் செய்திருப்பாரா? இன்றைய நற்செய்தி வாசகமும், அனைவரும் கைவிடப்பட்ட நிலையில் அநாதையாக கிறிஸ்து இயேசு சிலுவையில் தொங்கும் கல்வாரிக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது அல்லவா? நிலைமை இவ்வாறாக இருக்க, கிறிஸ்து இயேசுவை அரசராக ஒப்புக்கொள்ள முடியுமா? திருஅவையும் கிறிஸ்து அரசர் திருவிழாவைக் கொண்டாடுவது தகுமா?

இயேசு கிறிஸ்து தமது வாழ்நாளில், உலக அரசர்கள் கொண்டிருக்கும் எந்தவொரு அதிகாரத்தையும் ஆற்றலையும் வெளிகாட்டவே இல்லை. மாறாக, பாவிகள், வரி தண்டுவோர், விபச்சாரி,பெருந்தீனிக்காரர், குடிகாரர் (லூக்.7:34) முதலியவரோடுதான் அவர் பழகினார். மேற்குடி மக்களோடும் பணக்காரர்களோடும் அரசர்கள் பழக்குவதும் உறவு வைத்துக் கொள்வதும் வழக்கம். ஆனால் இயேசு கிறிஸ்துவோ இதற்கு நேர்விரோதமாக இருந்தார். இயேசுவிற்கு விலையுயர்ந்த கற்களைக் கொண்ட முடி இல்லை, மாறாக முள்முடியைச் வட்டினார்கள் (மத்.27:29). படையும் பட்டாளமுமில்லை, எள்ளி நகையாடும் கூட்டமே இருந்தது (லூக்.23:35).

இயேசுவின் நவீன காலச் சீடர்களான நாமும், இயேசு கிறிஸ்து அரசர் என்பதை உணர சில வேளையில் போராடுகிறோம். இயேசுவின் அரசோ, வாழ்வு தரும் அரசு, உண்மையின் அரசு (யோவா.14:6); நீதி, அமைதி, மகிழ்ச்சி தரும் அரசு (உரோ.14:17). அதனால்தான், இறப்பின் வேளையின்போதும், தமது மீட்பளிக்கும் அன்பை நல்லக் கள்வனுக்கு இயேசு தருகிறார். “இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்” (லூக்.23:42) என நல்லக் கள்வன் மன்றாடிய போது, “நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்” (லூக்.23:43) என்று உறுதி கூறுகிறார். இதுவே கிறிஸ்து அரசரின் ஆட்சியுரிமை. மீட்பளிக்கும் அன்பால் ஒவ்வொரு ஆன்மாவையும் மீட்டெடுக்கும் அதிகாரத்தையும் ஆற்றலையும் கொண்டிருக்கிறார். கைகளை விரித்து, மூன்று ஆணிகளில் சிலுவையில் தொங்கும் போதுகூட, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” (லூக்.23:34) என இயேசு மன்றாடுவது, மீட்பளிக்கும் அன்பின் உச்சமாக விளங்குகிறது.

இன்று நாம் முடிவு செய்வோம். சிலுவையில் தொங்கும் இரண்டு கள்வர்களைப் போலவும், தரையில் இருக்கும் மக்கள் கூட்டத்தைப் போலவும், நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு சூழ்நிலைகளில் சிக்கிக் கொண்டு தவிக்கிறோம். தரையில் இருக்கும் மக்கள் கூட்டத்தைப் போல் ஏளனமாக பேசிக் கொண்டிருக்கப் போகிறோமா? கிஞ்சிற்றும் பச்சாதாபமில்லாமல் ஆணவத்தோடு பேசும் மற்றொரு கள்வனைப் போல் இருக்கப் போகிறோமா? அல்லது தமது பாவத்தை உணர்ந்து, மனவருத்தம் கொண்டு, இரக்கம் மிகுந்த இயேசுவைக் கண்நோக்கும் நல்லக் கள்வனைப் போல் இருக்கப் போகிறோமா?

“கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா?” (லூக்.23:40) என்று நல்லக் கள்வன் மற்றொருனைப் பார்த்துக் கேட்பது நமது காதில் விழுகிறதா? மற்றவர்களைக் குறை கூறாமல் நமது ஒவ்வொரு செயலுக்கு நேர்மையாக பொறுப்பேற்றுக் கொள்வதே, கடவுளுக்கு அஞ்சுவதாகும். நல்லக் கள்வன் தேர்ந்தெடுத்தப் பாதையை நாமும் தேர்வு செய்வோம். “நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்” என இயேசுவும் நம்மைப் பார்த்துக் கூறட்டும்.

அந்தோணி இன்னாசி
சைபர்ஜெயா

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.